பக்கங்கள்:-28

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 12 | ஞாயிற்றுக்கிழமை | 25.02.2024 | அதிர்வு 208 |
|---|---|---|---|---|---|

## பாடசாலை மாணவி வெட்டிப் படுகொலை

**தென்னிலங்கையில் கொடூரம்**

பாடசாலை மாணவி ஒருவர் பட்டப்பக லில் வீட்டில் வைத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் கம்பஹா மாவட்டம், கந்தானை 06

## ஜனாதிபதி தலைமையில் 28, 29 இல் யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள்

(ந.லோகதயாளன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் எதிர்வரும் 28 மற்றும் 29 ஆம் திகதிக ளில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத் தில் இடம்பெறும் இந்த விசேட ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டங்களில் பல அமைச் சுக்களின் செயலாளர்கள் கலந்துகொள் ளவுள்ளனர்.

விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டங்களைத் தொடர்ந்து இரு மாவட்டங் களிலும் உள்ள காணி தொடர்பான பிரச் சினைகளைத் தீர்க்கும் வகையில் நடமாடும் சேவையும் ஒழுங்கு செய்யப்பட் டுள்ளது. 06





### கச்சதீவு திருவிழா புறக்கணிப்பையடுத்து

# இந்திய மீனவர் விடுதலை பற்றி இன்று விசேட பேச்சுக்கு ஏற்பாடு

(நடராசா லோகதயாளன்)

இலங்கை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 5 இந்திய மீனவர்களின் விடுதலை தொடர்பில் இன்று இலங்கை - இந்தியா இடையே விசேட பேச்சு நடைபெறவுள்ளது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட வேளை கைது செய்யப்பட்ட இந்தியாவின் தமிழக மீனவர்கள் ஐவர் தற்போது சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர். 06

## இலங்கை இந்தியாவின் பிராந்தியமா?

### அமைச்சர் ஹரின் கருத்துக்கு சுதந்திரக் கட்சி கடும் கண்டனம்



"இலங்கையானது இந்தியாவின் பிராந்தி யம் அல்ல. அவ்வாறு பிராந்தியம் என அமைச் சர் ஹரின் பெர்னாண்டோ கருத்து வெளியிட் டிருந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதனை வன்மையாகக் கண்டிக்கின்றது."

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரான துஷ்மந்த மித்ர பால தெரிவித்தார். 06



சிரேஷ்ட பத்திரிகை யாளர், 'தமிழன்' நாளித ழின் பிரதம ஆசிரியர் ஆர்.சிவராஜா தமது நிறு வனத் தொலைக்காட் சிக்காக வாராந்தம் நடத் தும் 'நெற்றிக்கண்' நிகழ்ச்சியில் இவ்வாரம் ரெலோத் தலைவர் செல் வம் அடைக்கலநாதன் எம்.பியை செவ்வி கண்டிருக்கிறார்.

பேட்டி என்னவோ ரெலோத் தலைவருடன் தான். ஆனால் பெரும்பாலும் விவகாரம் தமிழரசு பற்றியதாகவே இருந்தது. 06





# இலங்கைப் பக்தர்கள் மட்டும் பங்கேற்ற கச்சதீவு திருவிழா

(எஸ்.நிதர்ஷன்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாத் திருப்பலி நிகழ்வு நேற்றுக் காலை யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை கொடியேற்றத்தை அடுத்து சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூப பவனி ஆகியன இடம்பெற்றன.

இந்தத் திருவிழாவில் இலங்கையில் இருந்து 4 ஆயிரம் வரையான பக்தர்கள் பங்கேற்றனர்.

03





















# இலங்கைப் பக்தர்கள் மட்டும் பங்கேற்ற கச்சதீவு திருவிழா

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியப் பக்தர்கள் எவரும் பங்கேற்கவில்லை.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, யாழ். மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரம், இலங்கைக் கடற்படை தளபதி பிரியந்த பெரேரா, கடற்படை உயர் அதிகாரிகள், யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் , பொலிஸ் உயர் அதிகாரிகள், மதகுருமார்கள், பக்தர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

இந்தத் திருவிழாவில் பக்தர்களின் நலன் கருதி சுகாதார வசதிகள், போக்குவரத்து ஒழுங்குகள், உணவு வசதிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டன.











# பஸ் – வான் நேருக்கு நேர் மோதி விபத்து!

(கம்பளை நிருபர்)

கம்பளை – கண்டி பிரதான வீதியில் கெலிஓயா பகுதியில் பஸ்ஸும் வானும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது,

பேராதெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெலிஓயா பெற்றோல் நிரப்பு நிலையத்திதுக்கு முன்பாகவுள்ள வளைவில் நேற்று இந்த விபத்து ஏற்பட்டுள்ளது,

அனுராபுரத்தில் இருந்து ஹட்டன் – சிரிபாதமலைக்கு யாத்திரிகர்களை ஏற்றி வந்த பஸ்ஸும், புஸல்லாவைப் பகுதியில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த வானுமே நேருக்கு நேர் மோதியுள்ளது.

வானின் சாரதி நித்திரைக் கலக்கத்தில் இருந்தமையால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

பஸ்ஸில் பெரியவர்களுடன் சிறு பிள்ளைகளும் பயணித்துள்ளனர். எனினும், அதில் பயணித்த அனைவரும் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர்.

பஸ்ஸில் பயணித்த ஒருவருக்கும், வானில் பயணித்த ஒருவருக்கும் மட்டும் சிறு காயங்கள் ஏற்ப்பட்டுள்ளன.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பேராதெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அறுவடைக்குத் தயாராக இருந்த வயலில் துப்பாக்கி ரவைகள் மீட்பு!



திருகோணமலைமஹதிவுல்வெவகுளத்துக்குஅண்மையில் உள்ள வயல் பகுதியிலிருந்து துப்பாக்கி ரவைகள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

வயல் உரிமையாளர்களால் மொரவெவ பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே துப்பாக்கி ரவைகள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

வயல் உரிமையாளர்களினால் நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தபோது துப்பாக்கி ரவைகளை அவர்கள் கண்டனர் என்றும், உடனடியாக மொரவெவ பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர் என்றும் கூறப்பட்டது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பாடசாலை மாணவன் நீரில் மூழ்கி பரிதாப உயிரிழப்பு!

பாடசாலை மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

தம்புள்ளை – இப்பன்கட்டுவ நீர்த்தேக்கத்தில் பாதுகாப்பற்ற இடத்தில் நீராடச் சென்ற பாடசாலை மாணவனே நீரில் மூழ்கி சாவடைந்தார்.

காலி – ஹல்வித்திகல பகுதியில் வசிக்கும் 16 வயதுடைய பாடசாலை மாணவனே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பன்கட்டுவ நீர்த்தேக்கத்தில் தம்புள்ளை பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் மேற்கொண்ட தேடுதலின்போதே மேற்படி மாணவனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அவர் தனது பாட்டி மற்றும் சகோதரருடன் அநுராதபுரத்துக்கு நேற்றுமுன்தினம் புனித யாத்திரை மேற்கொண்டிருந்தபோதே இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

மாணவனின் சடலம் மீதான பிரேத பரிசோதனை நேற்று நடைபெற்ற பின்னர் சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

# முல்லைத்தீவு தச்சடம்பன் பகுதியில் கத்திக் குத்தில் இளைஞன் மரணம்

முல்லைத்தீவு, மாங்குளம், ஒலுமடு, தச்சடம்பன் பகுதியில் கத்தி குத்துக்கு இலக்கான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது 27 வயதுடைய விஜயராசா சோபிதன் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவந்துள்ளதாவது:-

வீதியால் பயணித்த இந்த இளைஞரை வழிமறித்த மற்றும் ஒரு இளைஞர் கத்தியால் குத்தித் தாக்கியுள்ளார்.

இதன்போது படுகாயமடைந்த இளைஞர் மாங்குளம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



உயிரிழந்தவரின் சடலம் மாங்குளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வட்டவளை தோட்டத்தில் வீடு ஒன்றின் பின் பகுதியில் சிசுவின் சடலம் மீட்பு!

## புதைக்கப்பட்டு ஆறு மாதங்கள் ஆகியிருக்கலாமாம்



ஹட்டன் – வட்டவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வட்டவளை தோட்டத்தில் வீடு ஒன்றின் பின் பகுதியில் குழி தோண்டி புதைக்கப்பட்டிருந்த சிசு ஒன்றின் சடலம் கடந்த வியாழனன்று மீட்கப்படடுள்ளது என்று வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டவளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற வட்டவளைப் பொலிஸார் துணி ஒன்றில் சுற்றிப் புதைக்கப்பட்டிருந்த சிசுவின் சடலத்தை மீட்டுள்ளனர்.

சிசுவை பெற்ற தாய் தலைமறையாகி இருந்த நிலையில் அவரை கொழும்பில் வைத்துப் பொலிஸார் கைது செய்துள் ளனர் என்று தெரிவிக்கப்பட்டள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய அந்த பெண்ணின் கணவர், மகள் ஒருவர் மற்றும் குழி பறிக்க உதவிய பக்கத்து வீட்டுக்காரர் ஆகியோரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவத்தில் தலைமறைவாகியிருந்த தாய் டயகம பிரதேசத்தை சேர்ந்த 37 வயதுடையவர் என்று தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் சடலமாக மீட்க்கப்பட்டுள்ள சிசு முறைக்கேடாக பெற்றெடுக்கப்பட்ட சிசுவா? சிசு பிறந்தவுடன் கொலை செய்யப்பட்டு வீட்டின் பின்பகுதியில் குழி பறித்துப் புதைக்கப்பட்டதா என்ற பல்வேறு கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேநேரம் சடலமாக மீட்கப்பட்ட சிசு புதைக்கப்பட்டு ஆறு மாதங்களாகி இருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிட்ட பொலிஸார், மீட்கப்பட்ட சிசுவின் உடல் பாகங்களை உடல் கூற்று பரிசோதனைக்காகத் தாம் அனுப்பி வைத்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

# ஐந்தரை மாதப் பிஞ்சுக் குழந்தையை விட்டுச் சென்றோர் பற்றி விசாரணை!

கலஹா லுல் கந்துர தோட்டத்திலுள்ள, வாடகை அறையில் ஐந்தரை மாதக் குழந்தையை விட்டுவிட்டு வெளிநாடு சென்ற இளம் தம்பதி தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் இருந்து தற்காலிகமாக இவர்கள் அங்கு தங்க வந்துள்ளனர். அவர்கள் வரும் போது அந்தப் பெண் மனநோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் கடந்த வியாழனன்று அந்த அறையில் வசிக்கும் ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட தம்பதிகள், தாங்கள் வெளிநாடு செல்வதால் அறையில் விட்டு வந்த குழந்தையை பார்த்துக் கொள்ள யாரையாவது ஏற்பாடு செய்யுமாறு கூறியுள்ளனர்.

இது தொடர்பில் தோட்ட நிர்வாக அதிகாரிக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து , குடும்ப நலப் பணியாளர் தோட்டத்துக்குச் சென்று பார்த்தபோது அறையில் குழந்தை அழுது கொண்டிருந்துள்ளது.

மீட்கப்பட்ட குழந்தை குடும்ப நலப் பணியாளரால் தெல்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தெல்தோட்டை வைத்தியசாலையில் தாய்ப்பால் ஊட்டும் வசதிகள் இல்லாத காரணத்தால், குழந்தை பேராதனை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று



தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் மற்றும் கண்டி மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று கலஹா தெல்தோட்டை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி கபில அத்தபத்து தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள கலஹா பொலிஸார், தம்பதியினர் உண்மையில் வெளிநாடு சென்றனரா அல்லது வெளிநாடு செல்லும் போர்வையில் நாட்டில் எங்காவது மறைந்து இருக்கின்றார்களா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இப்போது சூடு – குழப்பம் – மிக்க அரசியல் விவகாரம் அதுதானே. அதைத் தவிர்த்து அரசியல் செய்வது – பேசுவது – பொருத்த மற்றதல்லவா...!

அந்தச் செவ்வியில் இரண்டு விட யங்கள் முக்கியமானவை.

ஒன்று – தமிழரசு ஒற்றுமைப்பட்டுச் செயல்பட வேண்டும் என்று விடாது வலியுறுத்திய செல்வம் எம்.பி., அதன் தலைவர்கள் சுயநலம் துறந்து, ஐக்கி யமாக, ஜனநாயக முறையில் கட்சியை வழிநடத்த வேண்டும் என்று விநயமாகத் தாம் கேட்டுக் கொள்கின்றார் என்றார் அவர். அதற்காகத் தான் தமது ஜனநா யகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களான சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறீகாந்தா மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலை வர்களையும் சேர்த்துக் கொண்டு தமிழ ரசின் தரப்புகளைச் சந்தித்து, ஒற்றுமை முயற்சியில் ஈடுபட போகின்றார் என்றும் கூறினார்.

அடுத்தது – தாங்கள் அமைத்துள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியில் – அதன் குத்துவிளக்கு என்ற பொதுச் சின்னத்தில் – இணைந்து செயல்பட தமிழரசு கட்சியும் முன் வர வேண்டும், அப்படி முன்வந்தால் அந்தக் கூட்டணி யின் தலைமையை தமிழரசு கட்சிக்கு வழங்க தாம் முன்னின்று பிரேரித்து வழி செய்வார் என்று செல்வம் கூறியிருக்கின் றார்.

இக்கருத்துக்கள் தொடர்பில் என் குறிப் புகள், பிரதிபலிப்புகளைத் தவிர்த்துக் கொள்கிறேன். வாசகர்களும் தமிழரசின ருமே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

அந்த செவ்வியை வாசகர்கள் கேட்டறி வதற்காக அதன் இணைப்பை இங்கு தந்துள்ளேன். பார்த்துக், கேட்டு, ரசித்து அறிக..!




## இலங்கை இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"அமைச்சர் (ஹரின் பெர்ணான்டோ) எந்த நோக்கில் அந்தக் கருத்தை வெளியிட் டார் எனத் தெரியவில்லை. அது பற்றி நான் முழுமையாக ஆராயவில்லை. எனி னும், இலங்கை என்பது இந்தியாவின் பிராந்தியம் கிடையாது.

அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்திய விரோதப் போக்கைக் கடைப்பிடிக் கும் கட்சி அல்ல. பொருளாதாரம் சார்ந்த விடயங்களின்போது ஒத்துழைத்துச் செயற்படலாம்." – என்றார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராகத் தொடுத்துள்ள வழக்கை தயாசிறி ஜயசேகர நீக்கிக்கொண்டால் அவர் சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணியில் இணையலாம் என்றும், அதற்குத் தடை இல்லை என்றும் துஷ் மந்த மித்ரபால மேலும் கூறினார்.

## இந்திய மீனவர் விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறைத் தண்டனை அனுபவிக்கும் ஐவரில் மூவருக்கு 6 மாத சிறைத் தண்டனையும், இருவருக்கும் ஓர் ஆண்டு சிறைத் தண்ட னையும் விதிக்கப்பட்டுள்ள நிலையில், இவர்களை விடுவிப்பது தொடர்பிலேயே இன்று பேச்சு இடம்பெறவுள்ளது.

இன்றைய பேச்சுக்கான ஏற்பாடுகள் மற்றும் அதில் கலந்துகொள்வோருக் கான ஒழுங்குகள் தொடர்பில் நேற்று முன்தினம் இலங்கைக்கான இந்தியத்தூத ரகத்தின் துணைத் தூதுவர் சத்தியான் ஜல் பாண்டே, இலங்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சின் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இந்திய மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி தமிழக மீனவர்கள் கச்சதீவு திருவிழாவைப் புறக்கணித்த நிலையில், தற்போது இராமேஸ்வரத்தில் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்திலும் ஈடு பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி தலைமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்கான அறிவித்தல் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் ஊடாக 2024.02.19 ஆம் திகதி கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலை மாணவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதேசத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.


அதே பிரதேசத்தைச் சேர்ந்த 17 வய–துடைய எஸ்.டயானா என்ற மாணவியே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

ஒருதலைக் காதல் விவகாரத்தால் இந் தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசா ரணையில் தெரியவந்துள்ளது.

கொலைச் சந்தேகநபரான 21 வயது இளைஞரைக் கைது செய்துள்ள பொலி ஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டு வருகின் றனர்.









# மட்டக்களப்பில் நடைபெற்று முடிந்த ‘யாதும் ஆனவள்’ செயலூக்க உரை!

(பழுவூரான்)

இந்திய தூதரகத்தின் ஏற்பாட்டில் கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகிய கற்கைகள் நிறுவனம் நடத்திய “யாதும் ஆனவள்” செயலூக்க உரை நிகழ்வு மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் அழகிய கற்கை நிறுவன ராசதுரை அரங்கில் நேற்று இடம்பெற்றது.

நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி பாரதி கெனடி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதி களாக மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரன், கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் வல்லிபுரம் கனகசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்பபோது மதத் தலைவர்கள், கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், பொது மக்கள், மாவட்ட சிவில் சமூகப் பிரதி நிதிகள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்ட னர்.

இந்தியாவின் தலைசிறந்த செயலூக்க விரிவுரையாளர் களில் ஒருவரான திருமதி ஜெயந்த ஸ்ரீ பாலகிருஷ்ணன் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு மாணவர்களுக் கான செயலூக்க உரையை நிகழ்த்தினார்.

அதன் பின்பு பத்து மாணவர்களுக்கான கற்றலுக்குரிய சந்தேக வினாக்கள் கேட்கும் சந்தர்ப்பம் இங்கு வழங்கப் பட்டது. பிரதம பேச்சாளரால் கற்றலுக்குரிய உதவிகளும் இங்கு வழங்கப்பட்டன.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## திடீர்ப் பொதுத் தேர்தல் வருமா?

இந்த ஆண்டில் தேர்தல் அல்லது தேர்தல்கள் நிச்சயம். ஆனால் எந்தத் தேர்தல் முதலில், எது பின்னால் என்று தெரியாமல் குழம்பி நிற்கின்றன தென்னிலங்கை அரசியல் தரப்புகள்.

அரசமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு செப்டம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதித் தேர்தலை தேசிய தேர்தல் ஆணைக்குழு நிச்சயம் நடத்தியாக வேண்டும். தேர்தல் ஆணையம் நினைத்தால் கூட அதைத் தள்ளிப் போடவோ, முற்கூட்டி நடத்தவோ முடியாது.

இந்த ஒரு மாத காலத்துக்குள் ஒரு நாளில் தேர்தலை நடத்தும் திகதியை மட்டும் தேர்தல் ஆணையம் நிர்ணயிக்கலாம். ஆனால் அந்த ஒரு மாத காலத்துக்குள் ஜனாதிபதி தேர்தலை அது நடத்தியாக வேண்டும்.

ஆகவே, அந்த ஒரு மாத காலத்துக்குள் - அதாவது அடுத்த ஏழு அல்லது ஏழரை மாதத்தில் - ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடத்தப்பட்டாக வேண்டும்.

ஆனால், அதற்கு முன்னர் திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட அதிக வாய்ப்புகள் இருக்கின்றன எனத் தென்னிலங்கை வட்டாரங்கள் கூறுகின்றன.

அதிரடியாக அத்தகைய தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் தென்னிலங்கை அரசியல் தரப்புகள் மட்டுமல்ல, வடக்கு - கிழக்கின் அரசியல் தரப்புகள் கூட குழப்பத்திலும் சிக்கல்களிலும் மாட்டி அந்தரப்படும் சூழல் ஏற்படும் என்பது கண்கூடு.

தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் ஏற்கனவே இரண்டரை ஆண்டுகளைத் தாண்டி விட்டது. அரசமைப்பு ஏற்பாடுகளின் படி, ஒரு நாடாளுமன்றத்தின் ஐந்து ஆண்டுகள் பதவிக் காலத்தில் இரண்டரை ஆண்டுகள் கழிந்த பின்னர், எச்சமயத்திலும் அந்த நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலுக்கு அழைப்பு விடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைத்தால் தற்போதைய நாடாளுமன்றத்தை எந்த நேரத்திலும் கலைத்துப் பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்க முடியும்.

எப்படியும் ஏழரை மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் வரப்போகின்றது. அதை எதிர்கொண்டாக வேண்டிய கட்டாயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளார்.

ஆனால் அதனை எப்படி எதிர்கொள்வது, எந்தெந்தத் தரப்புகளை அணி சேர்ப்பது, என்ன நிலைப்பாடு எடுப்பது என்பவை தெரியாமல் குழப்பத்தில் இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலுக்கு அழைப்பு விடுத்தால், அந்தத் தேர்தல் முடிவு மூலம் ஜனாதிபதி தேர்தலை தாம் எதிர்கொள்வதற்கான வாய்ப்பு - உபாயம் - தமக்குக் கிட்டும் என்றும் கருதுகிறார் எனக் கூறப்படுகின்றது.

இப்போதைய நிலையில் ஜனாதிபதித் தேர்தலைமுதலில்எதிர்கொண்டால், ஆளும் கட்சி சரிவையே சந்திக்கும் என்று சில கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

மாறாக, தற்போதைய சூழலில் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் எந்த ஒரு கட்சிக்கும் - கூட்டணிக்கும் - தனித்து அறுதிப் பெரும்பான்மை கிடைக்கப் பெறாமல், ஒரு தொங்கு நாடாளுமன்றமே உருவாகும் என்று உளவுத் தகவல்கள் கூறுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுத் தேர்தலில் எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் தொங்கு நாடாளுமன்றம் ஏற்பட்டால், கட்சிகளை - தரப்புகளை - கூட்டுக்களை - ஒன்றிணைத்து ஓர் அரசாங்கத்தை உருவாக்கும் நடவடிக்கையை ஜனாதிபதியான தாமே முன்னின்று முன்னெடுக்க முடியும் என்று ரணில் விக்கிரமசிங்க கருதுகிறாராம்.

அப்படி ஓர் அரசாங்கத்தைத் தாமே முன்னின்று தோற்றுவித்தால் அந்த அரசில் இருப்பவர்கள் அரசைத் தொடர்ந்து தக்க வைப்பதற்காக, வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமக்காக உழைத்து, தம்மை வெற்றி பெற வைக்க முயல்வர் என்று மனக்கணக்குப் போடுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தான் ஜனாதிபதியாக இருக்கும்போதே பொதுத்தேர்தலை நடத்தினால், இப்போது தேர்தல்களில் அடிபட்டு நசுங்கிப் போய்க் கிடக்கும் தமது ஐக்கிய தேசியக் கட்சியை ஓரளவுக்கேனும் தூக்கி நிறுத்த முடியும் என்றும் ரணில் கணக்கிடுகின்றார் எனவும் கூறப்படுகின்றது.

இதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் கணக்கீடு என்றால், இனி எந்தச் சமயத்திலும் இப்போதைய நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொது தேர்தலுக்கு உத்தரவிடும் அறிவிப்பு வர வாய்ப்புகள் தாராளமாக உண்டு.





# வடக்கு மீனவர்களின் பொருளாதாரத்தை சூறையாடும் இராமேஸ்வரம் மீனவர்களின் போராட்டம் நியாயமற்றது

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் உப தலைவர் வர்ணகுலசிங்கம் தெரிவிப்பு




“வடக்கு மீனவர்களின் வயிற்றில் அடித்து, கடல்வளத்தை அழித்து எமது பொருளாதாரத்தை சூறையாடிவிட்டு, கச்சதீவுக்கு பக்தர்களை போகவிடாது தடுத்து போராட்டம் நடத்துவது நியாயமற்றது.”

– இவ்வாறு யாழ்ப்பாணம் – வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் உப தலைவர் நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இராமேஸ்வரம் முதல் காரைக்கால், நாகபட்டிணம் வரையான இந்திய இழுவைப் படகுகள் நாளாந்தம் எல்லை தாண்டி எமது கடல் இறையாண்மைக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன.

வடக்கு மீனவர்களது வயிற்றில் அடித்து எமது வாழ்வாதாரத்தை அழித்து எமது மீன்வளங்களை அள்ளிச் செல்கின்றனர்.

இதன் போது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களை, மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு வடக்கு மீனவர்கள் நாம் தான் கோரிக்கை விடுத்தோம். அரசுக்கு அழுத்தம் கொடுத்தோம். அதனடிப்படையில் மீனவர்கள் மனிதாபிமான அடிப்படையில் நீதிமன்ற நடவடிக்கையூடாக விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

ஆனால், இராமேஸ்வரம் விசைப்படகு சங்கத்தினர் அராஜகத்திற்கு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கைதாகி சிறையில் உள்ள ஐவரும் யார்? கடற்படையினரால் கைதாகி நீதிமன்றினால் எச்சரிக்கை செய்யப்பட்டு நிபந்தனை அடிபரபடையில் விடுவிக்கப்பட்ட இருவர். இரண்டாவது தடவையாக நீதிமன்றின் எச்சரிக்கையை உதாசீனம் செய்து மீளவும் இரண்டாவது தடவையாக இலங்கையின் இறையாண்மைக் கடல் பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட போது கைதானவர்கள்.

ஏனைய மூவரும் ஜி.பி.எஸ். கருவியைக் கையாண்டும் எல்லையைத் தாண்டி படகைச் செலுத்திய படகோட்டிகள். இவர்களைத் தான் நீதிமன்றம் குற்றவாளிகளாக கருதி ஆறு மாத கால சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

ஆறு கோடி மக்களில் 2500 விசைப்படகு உரிமையாளர்களையும், அவர்களின் சட்டவிரோத மீன் பிடி முறையையும் தான் நாங்கள் எதிர்க்கிறோம்.

நீங்கள் அராஜகமான போராட்டம் நடாத்தி கச்சதீவு திருவிழாவிலும் அரசியலைப் புகுத்தியுள்ளீர்கள். பல பக்தர்களை கச்சதீவு வரவிடாமல் தடுத்தீர்கள், கடலோர காவல் படையினரை குவித்து தடுத்தீர்கள், இதன் பின்னால் தமிழக முதல்வர் ஸ்டாலின் மற்றும் மோடி அரசின் அரசியல் உள்ளமை தெளிவாக தெரிகிறது.

நீங்கள் அராஜகமான போராட்டங்களை நடாத்தினால், நாமும் கடலில் படகுகளை இறக்கி போராட்டத்தை தொடங்குவோம். இனி வரும் காலங்களில் கைது செய்யும் மீனவர்களை விடுதலை செய்யவிடாது நாமும் சட்டத்தரணி ஒருவரை நீதிமன்றில் நிறுத்துவோம்.

2010 ஆம் ஆண்டுகளின் பின் இந்திய இழுவைப் படகுகளினால் அழிக்கப்பட்ட பல கோடி பொறுமதியான எமது சொத்துக்களுக்கு நட்ட ஈட்டை கோருவோம். அதை செலுத்தாத வரை கைது செய்யும் மீனவரை விடுதலை செய்யக்கூடாது என நாமும் நீதிமன்றில் வாதிடுவோம்.” – என்றார்.



# தேர்தல்களில் வெற்றி வாகை சூடுவோம்! 50 எம்.பிக்கள் எம்முடன் இணையத் தயார்!!

## புதிய அரசியல் கூட்டணியின் முக்கியஸ்தர் சுசில் சூளுரை

“ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் என்பன உரிய நேரத்தில் நடத்தப்படும். குறித்த தேர்தல்களின் எமது புதிய கூட்டணி வெற்றி வாகை சூடும் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன். அதற்குச் சான்றாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 50 பேர் எம்முடன் இணையத் தயாராகவுள்ளனர்.”

– இவ்வாறு புதிய அரசியல் கூட்டணியின் கொழும்பு மாவட்டத் தலைவரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

புதிய அரசியல் கூட்டணியின் கொழும்பு மாவட்ட முதலாவது பொதுக்கூட்டம் நேற்று ஹைட் பார்க் மைதானத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

”கடந்த ஜனவரி மாதம் ஜா - எலயில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தை விட பன்மடங்கு மக்கள் தொகையுடன் இன்று கொழும்பில் எமது முதலாவது கூட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இன்று இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உட்பட மட்டக்களப்பின் முக்கிய அரசியல் பிரமுகர்கள் என்னுடன் இணைத்துள்ளனர்.தற்போது சில அரசியல் கட்சிகள் தமக்குப் போட்டியாக அரசியலில் வேறு எந்தப் பலமும் இல்லை என்று எண்ணிக்கொண்டிருக்கின்றன. அந்த எண்ணம் தவறானதாகும். அவ்வாறு எண்ணும் கட்சிகளுக்குச் சவாலாக எமது புதிய கூட்டணியை நாம் உருவாக்கியிருக்கின்றோம்.

எமது கூட்டணி இளம் தலைமுறையினரின் நிலைப்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் இடமளிக்கும் கூட்டணியாக அமைந்துள்ளது. வெற்றிக்கான கூட்டணியை அமைப்பதற்குப் பல ஆண்டுகள் தேவையில்லை. ஆறு மாத காலத்துக்குள் வெற்றியை நோக்கிய பயணத்தை இலக்காகக் கொண்டு எமது கூட்டணி கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாட்டில் எவ்வாறான நிலைமை காணப்பட்டது என்பதை சகலரும் அறிவார்கள். அன்று இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தை சில அரசியல் சக்திகள் தமது சந்தர்ப்பவாத அரசியலுக்காக பயன்படுத்திக்கொள்ள முயற்சித்தன.

அதன் அடிப்படையிலேயே ஜனாதிபதி அலுவலகமும், பிரதமர் அலுவலகமும் கைப்பற்றப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தை முற்றுகையிடுவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. எனினும், அந்த முயற்சி தடுக்கப்பட்டது. அதன் காரணமாகவே இலங்கையில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது. இல்லை என்றால் இன்று ஜனநாயகம் கேள்விக்குறிக்குள்ளாகியிருக்கும்.

2009ஆம் ஆண்டு பிரபாகரனின் யுத்தம் நிறைவடைந்தது. ஆனால், அதன் பின்னர் பொருளாதார யுத்தம் ஆரம்பித்தது. அந்த யுத்தம் இன்றும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. எனவே, எமது புதிய கூட்டணியின் இலக்கு பொருளாதார யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தியடைச் செய்வதாகும்.



2022ஆம் ஆண்டு மே மாதம் நான் எனது அமைச்சைப் பொறுப்பேற்கும்போது பாடசாலை புத்தகங்களையோ சீருடைகளையோ வழங்க முடியாத நிலைமை காணப்பட்டது. ஆனால், இன்று முதலாம் தவணை ஆரம்பித்த உடனே எம்மால் பாட புத்தகங்களை விநியோகிக்க முடிந்துள்ளதோடு சீருடைகளையும் வழங்க முடிந்துள்ளது.

தற்போது தொழில் இன்றி உள்ள புதிய பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்கத் தயாராகவுள்ளோம். கடந்த 75 ஆண்டுகளாக ஏமாந்தது போதும் என்ற நிலைப்பாட்டில் மக்கள் உள்ளனர். எனவே, மக்கள் மாற்றத்தையும் புதுமையையும் எதிர்பார்க்கின்றனர். மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் எமது புதிய கூட்டணி செயல்படும்.

அதற்கமைய எமது அடுத்த கூட்டம் இதனை விட பன்மடங்கு மக்கள் தொகையுடன் முன்னெடுக்கப்படும். அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 50 பேர் எம்முடன் இணையத் தயாராகவுள்ளனர். தற்போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பேசப்படுகின்றது. அரசமைப்புக்கு அமைய ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அடுத்த வருடம் ஆகஸ்ட் மாதத்துக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

அந்த இரு தேர்தல்களும் குறிப்பிட்ட தினத்தில் இடம்பெறும். குறித்த உத்தேச தேர்தல்களில் எமது புதிய கூட்டணி பாரிய வெற்றி பெறும் என்று நம்புகின்றோம். அந்த வெற்றிப் பயணத்துக்கான நடவடிக்கைகளையே நாம் இன்று ஆரம்பித்துள்ளோம். கற்பனைக் கதைகளால் மாத்திரம் எதையும் செய்துவிட முடியாது. எனவே, வார்த்தைகளால் மாத்திரமின்றி செயற்பாடுகளாலும் நாம் எமது வெற்றியை நிரூபித்துக் காட்டுவோம்.” – என்றார்.

# அரசியல் பேச விரும்பவில்லை என ஊடகத்துக்குத் தெரிவித்தார் ரஜினி!



நடிகர் ரஜினிகாந்த் இன்று சசிகலாவை அவரது புதிய இல்லத்தில் நேரில் சந்தித்துப் பேசினார். இதையடுத்து ஜெயலலிதாவின் இடத்தை யார் நிரப்புவார் என்று செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், "அரசியல் பேச விரும்பவில்லை" என தெரிவித்தார்.

சென்னை போயஸ் கார்டனில் உள்ள மறைந்த முதல்வர் ஜெயலலிதா வசித்த வேதா நிலைய இல்லத்துக்கு எதிரே வி.கே.சசிகலா புதிய வீடு ஒன்றை கட்டியுள்ளார்.

இந்த பங்களாவுக்கு கடந்த மாதம் கிரகப் பிரவேசம் நடைபெற்றது. இதில் கலந்த கொள்ள முடியாத சூழலில் இன்று (24) நடிகர் ரஜினிகாந்த் சசிகலாவின் வீட்டுக்கு நேரில் வருகை தந்தார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், "கோயில் போல உள்ளது. இந்த வீடு  பெயர், புகழ், சந்தோஷத்தை கொடுக்க வேண்டும் என இறைவனை வேண்டிக்கொள்கிறேன்" என்றார்.

அவரிடம், 'ஜெயலலிதாவின் ஆளுமை மிக்க இடத்தை தமிழகத்தில் யார் பூர்த்தி செய்வார் என நினைக்கிறீர்கள்?' என செய்தியாளர்கள் கேட்டதற்கு, "அரசியல் பேச விரும்பவில்லை" என முடித்துகொண்டார் ரஜினி.

# கங்கையில் நீராடச் சென்றபோது விபத்து; குளத்தில் டிராக்டர் விழுந்ததில் 22 பேர் பலி!

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

கங்கையில் புனித நீராட சென்றபோது குளத்தில் டிராக்டர் விழுந்து 22 பேர் பலியாகியுள்ளனர்.

விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபா வழங்கப்படும் என்று முதல்வர் யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார்.

உத்தர பிரதேசத்தின் காஸ்கஞ்ச் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை டிராக்டர் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து சாலையோரத்தில் உள்ள குளத்துக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது.

இதில் டிராக்டர் பெட்டியில் இருந்த 7 குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட 22 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். சிலர் காயமடைந்தனர்.

காதர்கஞ்ச் பகுதியில் உள்ள கங்கை நதியில் புனித நீராடுவதற்காகச் சென்றபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து குறித்து தகவல் அறிந்த மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். அப்பகுதியில் ஏராளமான மக்களும் திரண்டனர்.

இந்தப் பக்தர்கள் 'மக பூர்ணிமா' விழாவில் புனித நீராடுவதற்காக கங்கை நதிக்கு சென்று கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டது. விபத்து குறித்து அறிந்து அப்பகுதி மக்கள் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பஞ்சுமிட்டாய் விற்பனைக்கு தமிழகத்தில் தடை விதிப்பு!

இந்தியாவின் தமிழகத்தில் பஞ்சுமிட்டாய் விற்பனைக்கு தடை விதித்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

பஞ்சு மிட்டாயில் புற்றுநோயை உண்டாக்கும் வேதிப் பொருள்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் பறிமுதல் செய்யப்பட்ட பஞ்சு மிட்டாய்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில் "ரோடமைன் பி" இரசாயனம் பயன்படுத்தியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பஞ்சு மிட்டாயில் புற்றுநோயை ஏற்படுத்தும் நிறமி சேர்க்கப்பட்டுள்ளமையும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து பச்சை, ஊதா உள்ளிட்ட பல்வேறு நிறங்களில் விற்பனை செய்யப்படும் பஞ்சு மிட்டாய்களைக் கொள்வனவு செய்யக் கூடாது என்றும் இந்திய உணவு பாதுகாப்புத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழக அரசு விதித்துள்ள தடை உத்தரவை மீறிப் பஞ்சு மிட்டாய் விற்பனை செய்யப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழக அரசு வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

# பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரின் கட்சித் தலைவர் அதிரடியாக நீக்கம்!





பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரான இம்ரான் கானின் தெஹ்ரீக் – ஏ-இன்சாஃப் கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்து, பாரிஸ்டர் கோஹர் அலி கான் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த 8 ஆம் திகதி பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்ற நிலையில் அதனுடன் சேர்த்து பஞ்சாப், சிந்து, பலூசிஸ்தான், கைபர் பக்துன்கவா ஆகிய மாகாணப் பேரவைகளுக்கும் தேர்தல் நடைபெற்றது.

பொதுத் தேர்தலில், அதிகபட்சமாக முன்னாள் பிரதமரும் கிரிக்கெட் நட்சத்திரமுமான இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் கட்சியின் ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளர்கள் 93 இடங்களைக் கைப்பற்றினர்.

நவாஸ் ஷெரீஃப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் கட்சிக்கு 75 இடங்கள் கிடைத்தன.

முன்னாள் பிரதமர் பேநசீர் புட்டோவின் மகனும், முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சருமான பிலாவல் புட்டோ ஜார்தாரியின் தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி 54 இடங்களில் வெற்றி பெற்று 3 ஆம் இடத்தைப் பிடித்தது.

எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத சூழலில், பிற கட்சிகளுடன் கூட்டணி அமைத்து ஆட்சியமைக்கும் முடிவை தற்போது சிறையிலுள்ள இம்ரான் கான் நிராகரித்துவிட்டார்.

இந்தச் சூழலில், பாகிஸ்தானில் பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் பிற கட்சிகளின் ஆதரவுடன் பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் கட்சி புதிய அரசை அமைக்கவுள்ளது.

இந்த நிலையில், தேர்தலில் மோசமான செயற்பாடு காரணமாக, இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்து, பாரிஸ்டர் கோஹர் அலி கான் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அக்கட்சியின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க உட்கட்சித் தேர்தல் மார்ச் 3 ஆம் திகதி நடைபெறும் எனவும், கட்சியின் புதிய தலைவராக 71 வயதான பாரிஸ்டர் அலி ஸாபர் தேர்வு செய்யப்பட உள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

# மன்னர் சார்லஸ் அடுத்த வாரிசாக இளவரசர் வில்லியமைத் தெரிவார்!

## அரச குடும்பத்தின் எழுத்தாளர் டொம் குயின் தெரிவிப்பு

மன்னர் சார்லஸ் தனது அடுத்த வாரிசு யார் முடிவு செய்யும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

புற்றுநோயால் மன்னர் சார்லஸ் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மன்னர் சார்லசுக்கு வந்துள்ள அந்த நோய், நினைத்ததைவிட அதிக ஆபத்தாக இருக்கிறது என்று அரச குடும்பத்தின் எழுத்தாளரும் நிபுணருமான டொம் குயின் தெரிவித்துள்ளார்.

80 வயதுகள் வரையாவது மன்னர் வாழ்வார் என்று முதலில் நம்பப்பட்ட நிலையில், அவரது புற்றுநோய் அதிக ஆபத்தானது என தெரியவந்துள்ளதால் அரச குடும்பம் மிகுந்த கவலையில் இருக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

இதனால், அடுத்து மன்னராக இருப்பவரை விரைவாக முடிவு செய்யும் முயற்சியை அவர் ஆரம்பித்துள்ளார் என்றும் அதை இரகசியமாக முன்னெடுத்து வருகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



மன்னர் சார்லஸ், தனக்கு அடுத்து அரியணை ஏறுபவராக, இளவரசர் வில்லியமைத்தான் அவரது மனதில் தேர்ந்தெடுத்து வைத்துள்ளார் என்பதில் மட்டும் எந்த சந்தேகமும் இல்லை என அவர் மேலும் கூறியுள்ளார்.

# தென்கொரியா அமெரிக்காவுடன் மீண்டும் கூட்டுப் போர் பயிற்சியில்!

வடகொரியாவின் தொடர் ஏவுகணை சோதனைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தென்கொரியா அமெரிக்காவுடன் இணைந்து மீண்டும் கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.

வடகொரியா தனது தொடர் ஏவுகணை சோதனையால் கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை ஏற்படுத்துகின்றது.

இதனால் தங்களது பாதுகாப்பு கருதி தென்கொரியாவும், ஜப்பானும் அமெரிக்காவுடன் இணைந்து கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபடுகின்றன.

இது தங்களுக்கு எதிரான போர் ஒத்திகை என்று கருதும் வடகொரியா இந்த பயிற்சியை கைவிட வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில், இதனை பொருட்படுத்தாத தென்கொரியா அமெரிக்காவுடன் இணைந்து தனது பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

அப்போது போர் விமானங்களை இடைமறித்து தாக்குதல் நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகளில் ஈடுபடுகின்றன என்று தென்கொரிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.



# யாழ். உயர்கல்விக் கண்காட்சி நேற்றுக் காலை ஆரம்பமானது

யாழ்ப்பாண உயர் கல்விக் கண்காட்சி நேற்றுக் காலை ஆரம்பமாகியுள்ளது. இந்த நிலையில் கண்காட்சி கூடத்தை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராம நாதன் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வலம்புரி விருந்தினர் விடுதியில் நேற்று (24) காலை ஆரம்பமாகியுள்ள இந்த கண்காட்சி இன்றும் (25) நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்காட்சியை காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

கண்காட்சி கூடத்தை அதிகமான பாடசாலை மாணவர்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.











# ‘ஆற்றல் மிகு ஈழத்தமிழ்ச் சமூகத்தை உருவாக்க கலைப்பணி ஆற்றுவோம்’

## பண்பாட்டு மலர்ச்சிக் கூடம் அழைப்பு

‘ஆற்றல் மிகு ஈழத்தமிழ் சமூகத்தை உருவாக்க கலைப்பணி ஆற்றுவோம்’ என்ற கருப்பொருளிலான கலந்துரையாடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை (25) மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம், கந்தர்மடம், பழம் வீதியில் அமைந்துள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு குறித்து ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கலை நிகழ்ச்சிகள் என்றால் என்ன?, கலை நிகழ்ச்சி களை எப்படி நிகழ்த்துவது?, கலை நிகழ்ச்சிகளை நிகழ்த் தும் போது மக்கள் மத்தியில் ஏற்படக் கூடிய விளைவுகள் யாவை? போன்ற வினாக்கள் தொடர்பாக, அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த இசை நிகழ்ச்சிகளை அடிப்படை யாகக் கொண்டு பல குழப்பமான கதையாடல்கள் நமது சமூகத்தில் நிலவுகின்றன.

இந்தகையதோர் பின்னணியில் ஈழத்தமிழரிடையே கடந்த காலங்களில் நிலவிய கலை நிகழ்ச்சிகள் எத்தகை யன?, அவை நிகழ்த்தப்பட்ட முறைமைகள் எத்தகையன?, அவை மக்கள் மத்தியில் ஏற்படுத்திய விளைவுகள் யாவை? என்பவை தொடர்பில் விளக்கங்களுடன் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.-என்றுள்ளது.

எதிர்காலத்தில் எமது சமூகத்தை ஆற்றல் மிகு சமூகமாக மாற்றுவதற்கு நமக்குத் தேவைப்படும் கலை நிகழ்ச்சிகள் பற்றிய உரையாடல்களும் இதில் அடங்கவுள்ளன.

இந்தச் சந்திப்பில் ஊடகவியலாளர்கள், இணையத் தளம் மற்றும் வலையொலி இயக்குநர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



# பொலிவேரியன் கிராமத்தில் வீடு தீப்பற்றி எரிந்து நாசம்!

**(நூருல் ஹுதா உமர்)**

பொலிவேரியன் கிராமத்தில் வீடு ஒன்று தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது.

அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சாய்ந்தமருது, மாளிகைக்காடு மக்களை மீள குடியமர்த்த பிரதேச அரசியல் தலைவர்களினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் உள்ள வீடொன்று நேற்றுக் காலை திடீரென தீப்பற்றி எரிந்தது. இதனால் வீட்டில் இருந்த பொருள்கள் தீக்கிரையாகின். வீட்டின் கூரைகள் சேதமாகியுள்ளன.

தீப்பற்றிய நேரத்தில் வீட்டில் யாரும் இருக்கவில்லை. அயலவர்கள் போராடி தீயணைப்பை மேற்கொண்டனர். கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியின் துரித நடவடிக்கையில் விரைந்து வந்த கல்முனை மாநகர தீயணைப்பு வாகனமும் தீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது.

தீயினால் வீட்டின் பொருள்கள் முற்றாக சேதமாகின. வீட்டின் கூரையும் அழிவடைந்துள்ளது. உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவிலை. அந்த இடத்திற்கு விரைந்த நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு தேவையான உதவிகளை வழங்க விரைவாக தேவையான மேலதிக நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.









# மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான
# பஞ்சரத பவனி



மாத்தளை, அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பஞ்சரத பவனி நேற்று ஆரம்பித்தது. ஆலயத்திலிருந்து பஞ்சரதங்களும் பவனியை ஆரம்பித்து, வீதியுலா வந்துகொண்டிருக்கின்றன. இன்று பிற்பகல் இருப்பிடத்தை வந்தடைந்து, பின்னர் பச்சை சாத்துதல் இடம்பெறும்.















# கொள்கலலில் மறைந்திருந்து மலேசியா செல்ல முயன்ற இருவர் உலகைச் சுற்றி நாடு மீண்டனர்

கொள்கலன் ஒன்றில் மறைந்திருந்து மலேசியாவிற்கு தப்பிச் செல்ல முயன்றபோது சீனாவில் கைது செய்யப்பட்ட இரண்டு இலங்கையர்களும் ஒரு வருடத்தின் பின்னர் நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதலில் இந்த இரண்டு சந்தேக நபர்களும் கொழும்புத் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பலில் ஏற்றப்பட்ட வெற்று கொள்கலனில் மறைந்திருந்து மலேசியாவிற்குத் தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர்.

26 வயதான மதி ராஜேந்திரன் மற்றும் 39 வயதான ஜெயக்குமார் தருமராசா ஆகிய இரு இலங்கையர்களே இப்படித் தப்பிச் செல்ல முயன்றனர்.

கடந்த ஜனவரி 30, 2023 அன்று, மலேசியா செல்வதற்காக கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'மெர்க்ஸ் யூனிகார்ன்' கப்பலில் ஏற்றப்பட்ட வெற்று கொள்கலனுக்குள் இந்த இருவரும் இரகசியமாக நுழைந்துள்ளனர்.

ஆனால் கப்பல் மலேசியாவிற்கு வந்தபோது, கொள்கலனில் மறைந்திருந்த இரு சந்தேக நபர்களையும் ஏற்றுக்கொள்ள மலேசியா மறுத்ததால், கப்பலின் கடல்சார் அதிகாரிகள் சந்தேக நபர்களை ஏற்றிக்கொண்டு பல நாடுகளுக்குச் சென்று இறுதியாக சீனாவிற்கு வந்துள்ளனர்.

அங்கு சீன அதிகாரிகள் இருவரையும் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் நாட்டிலிருந்து நாடு கடத்த நடவடிக்கை எடுத்ததன் பின்னர், நேற்றுக் காலை 05.01 மணியளவில், சீனாவின் ஷாங்காய் நகரிலிருந்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானமான யு.எல். -867 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த பின்னர், கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வு திணைக்களம், ஆள்கடத்தல் மற்றும் ஆள்கடத்தல் புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று அவர்களை கைது செய்து கொழும்பு கிருலப்பன பகுதியில் உள்ள பிரதான அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# முதியவரைத் தாக்கி தொலைபேசியைப் பறித்த சம்பவத்தில் மூன்று பேர் வவுனியாவில் கைது!

**(கே.வசந்தன்)**



வவுனியாவில் முதியவர் ஒருவரை தாக்கி விட்டு கைத்தொலைபேசியை பறித்துச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா - பண்டாரிக்குளம் பகுதியில் முதியவர் ஒருவர் வீதியால் சென்றபோது அவரை தாக்கி விட்டு அவரிடம் இருந்த கைத்தொலைபேசியை இருவர் பறித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட முதியவர் வவுனியா பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பில் 17 மற்றும் 38 வயதுடைய இருவர் பொலிஸாரால் கைது செய்யபட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அந்த இருவரும் முதியவரிடம் இருந்து பறித்து செவன்ற கைத்தொலைபேசியை வவுனியா நகரப் பகுதியில் உள்ள மதுபான நிலையம் ஒன்றில் கொடுத்து விட்டு மது அருந்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்துஅந்தக்கைத்தொலைபேசியை பெற்றுக் கொண்ட மதுபான சாலை ஊழியரும் கைது செய்யப்பட்டார். திருடப்பட்ட கைத்தொலைபேசியும் அவரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளின் பின் மூவரையும் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# உள்ளூர்ப் பிரமுகர்களுடன், உல்லாசப் பயணிகளையும் ஈர்த்த யாழ் ஆரோக்கிய சதுக்கத்தின் பௌர்ணமி கூடல்

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்ட நடைபாதை பகுதியில் சிகரம் நிறுவனத்தின் “படலை:வடக்கு மாகாண சுற்றுலா சேவை பிரிவு“ நடாத்திய உடல் – உள ஆரோக்கியத்துக்கான பௌர்ணமி கூடல் நிகழ்வு, உள்ளூர் பிரமுகர்கள் முதல் உல்லாசப் பயணிகள் வரையில் ஏராளமானவர்களை ஈர்ப்பதாக நடைபெற்றிருக்கின்றது.

நேற்று முன்தினம் பெப்பரவரி 23 ஆம் திகதி பௌர்ணமி தினத்தில் மாலை 4.30க்கு பண்ணை சுற்றுவட்ட நடைபாதை பகுதியில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த இந்த நிகழ்வில் யோகாசன செயல்முறை விளக்கமும், சும்பா உடற்பயிற்சி விளக்கமும் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் மருத்துவர்களான திருநாவுக்கரசு ராகுலன், தர்சினி சிவகுமார் ஆகியோர் உடல் – உள ஆரோக்கியத்துக்கான யோகாசன செயன்முறை விளக்கத்தைத் தமது மாணவர்களுடன் இணைந்து வழங்கினார்கள்.

யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை இறுதியாண்டு மாணவியான பிரியதர்ஷினி தர்மகுலசிங்கம் மற்றும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி க.பொ.த. சாதாரணதர மாணவியான தீரணா றுஷாங்கன் ஆகியோர் மருத்துவர்களுடன் இணைந்து மேடையில் ஆசனங்களைச் செய்து காட்டினார்கள்.

தொடர்ந்து சும்பா உடற்பயிற்சி நிபுணர் செரி வாணி நிகழ்வில் கலந்துகொண்டிருந்த இரண்டு சிறுமிகளை இணைத்து இசையுடன் கூடிய சும்பா உடற்பயிற்சி செயல்முறை விளக்கத்தை வழங்கினார். சும்பா செயன்முறை விளக்கத்தை யாழ் கோட்டை மதில் சுவரிலிருந்து கண்ணுற்ற சுற்றுலா பயணிகள் இரசித்து, தாமும் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டு மகிழ்ந்தனர்.

யோகாசனத்துடன் இணைந்து உடல் ஆரோக்கியத்துக்கு உகந்த பாரம்பரிய ஆரோக்கிய உணவுகளையும் அறிமுகப்படுத்தும் இந்தத் திட்டத்தின்படி, நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு இலைக்கஞ்சி மற்றும் குரக்கன் கூழ் என்பன வழங்கப்பட்டன. அல்லை விவசாயிகள் அமைப்பைச் சேர்ந்த கிரிசான் இவற்றைத் தயாரித்துக் கொண்டுவந்து நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கியிருந்தார்.

இந்த நிகழ்வில், யாழ். மாநகர ஆணையாளர் கிருஷ்ணேந்திரன், யாழ் வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரன், யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமார், கணிதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.அறிவழகன், ஐக்கிய நாடுகள் அலுவலக யாழ் உயரதிகாரி காயத்திரி, நோதேர்ண் வைத்தியசாலை உரிமையாளர் மருத்துவர் கேசவன், கொமேர்ஷல் வங்கி யாழ் பிராந்திய முகாமையாளர் ஜெயபாலன், யாழ் வைத்தியசாலை வீதி கிளை முகாமையார் ராஜமனோகரன், சம்பத் வங்கியின் யாழ் பிராந்திய முகாமையாளர் குமணன், ஜெற்விங் உல்லாச விடுதியின் பொது முகாமையாளர் நிலந்தி மற்றும் ஆளணி முகாமையார் சுவேதிகா, யாழ் ரி.சி.ரி. பல்பொருள் வாணிப நிறுவனத்தின் பொது முகாமையாளர் விக்னேஸ்வரன் உள்ளிட்ட பல்துறை சார் பிரமுகர்களுடன், பொதுமக்கள், ஆர்வலர்கள், எனப் பலரும் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

பௌர்ணமி தின விடுமுறைக்காக தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த பல உல்லாசப் பயணிகளும் இந்த நிகழ்வை வீதியோரங்களில் இருந்தும், கோட்டை மதில் சுவரிலிருந்தும் கண்டு களித்ததமை நிகழ்வின் சிறப்பம்சமாக அமைந்திருந்தது.









# தமிழரசுக் கட்சி செய்ய வேண்டியது என்ன?





அரசியல்வாதிகளின் பரவணிக்குணம் என்பது எப்போதுமே தங்களின் தவறுகளையும் குற்றங்களையும் மறைத்து மற்றவர்கள் மீது குற்றஞ்சாட்டுவது மட்டுமே. அதுதான் அரசியலில் வெற்றி தேடித்தரும் என்று நம்புகிறார்கள். இப்போது நீதிமன்றங்களில் வழக்குகளை எதிர்கொண்டு நிற்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்களும் தொண்டர்களும்கூட அரசியல்வாதிகளுக்கே உரிய பரவணிக்குணத்தை வெளிப்படுத்துவதிலேயே குறியாக இருக்கிறார்கள். மாறாக, விடயங்களை சுமூகமாக கையாள்வது தொடர்பிலான எந்தவித சிந்தனையையும் வெளிப்படுத்துகிறார்கள் இல்லை.



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு தொடர்பிலான அறிவிப்பு வெளியானது தருணம் முதல், அந்தக் கட்சி தனக்குள்ளேயே சேறுபூசுதல்களையும் பொய்புரட்டையும் செய்யத் தொடங்கி விட்டது. அது, கட்சியின் தமிழ்த் தேசிய அடையாளத்தை மிக மோசமாக சிதைத்து விட்டிருக்கின்றது. அத்தோடு, சொந்தக் கட்சிக்குள்ளேயே ஒழுங்கோடும் ஒற்றுமையோடும் ஜனநாயக மனப்பான்மையோடும் இயங்கத் தெரியாதவர்கள் எப்படி, தமிழ் மக்களின் தலைமைக் கட்சியாக நின்று வழிநடத்த முடியும் என்ற கேள்வியையும் எழுப்ப வைத்திருக்கின்றார்கள். இந்தக் கேள்விக்கு தமிழரசுக் கட்சியின் எந்தத் தலைவரிடத்திலாவது பதிலை எதிர்பார்த்தால், அந்தப் பதில் மற்றவர்கள் மீது குற்றஞ்சாட்டுவதாக மட்டுமே இருக்கும். ஒருபோதும், தவறுகளில் அல்லது கட்சியின் சீரழிவில் தங்களின் பங்கு குறித்து பேச மாட்டார்கள்.

அதற்கான அண்மைய உதாரணம், கிளிநொச்சியில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய சந்திப்பிலும் அரங்கேறியது. முல்லைத்தீவைச் சேர்ந்த வைத்தியர் சிவமோகன், மட்டக்களைப்பைச் சேர்ந்த முன்னாள் மாநகர சபைத் தலைவர் சரவணபவன் ஆகியோர், தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு, மத்திய செயற்குழுத் தெரிவு, பொதுக்குழு அங்கீகாரம் உள்ளிட்ட விடயங்களை முறையாக நடைமுறைப்படுத்தியிருந்தால், கட்சி இன்று நீதிமன்றங்களில் வழக்குகளைச் சந்தித்திருக்காது என்று கூறினார்கள். ஆனால், அப்போது, சந்திப்பில் தலைமை வகித்த மாவை சேனாதிராஜா, சிவஞானம் சிறீதரன் ஆகியோர், ஏற்கனவே நடந்த விடயங்களைப் பற்றி பேசுவதற்காக, குறித்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்படவில்லை என்று கூறி, மடைமாற்றியிருக்கிறார்கள்.

தமிழரசுக் கட்சியின் தலைவராக நீண்ட பத்து ஆண்டுகளாக செயற்பட்ட மாவை, கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள் நியமனத்தில் கட்சியின் யாப்பு ஒழுங்குக்கு மாறாக தொடர் குற்றங்களைப் புரிந்திருக்கிறார் என்பது தொடரும் குற்றச்சாட்டு. அதுபோல, தலைவருக்கான தெரிவின் போது, வாக்களித்தவர்களில் பலரின் நியமனம் யாப்புக்கு மீறியது என்று அந்தத் தேர்தல் வாக்களிப்பின் போதே சுட்டிக்காட்டப்பட்டது. தேர்தல் சமயத்திலேயே கட்சி யாப்பினை மீறும் செயலை மாவை புரியும் போது, வேட்பாளர்களான சிறீதரனும், எம்.ஏ.சுமந்திரனும், சீ.யோகேஸ்வரனும் அதனைக் கண்டுகொள்ளவில்லை. மாறாக அங்கீகரித்து செயற்பட்டிருக்கிறார்கள். இந்த நிலை என்பது, யாருமே கட்சியின் யாப்புக்கோ ஒழுங்கு முறைக்கோ மதிப்புக் கொடுத்தவர்கள் இல்லை என்பதை வெளிப்படையாக காட்டுகின்றது. இவ்வாறான தவறு நிகழும் போதே, அது நீதிமன்றங்களில் கட்சியை முன்னிறுத்தும் என்று இவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

கிடைக்கும் வரை ஆதாயம் பார்க்கும் மனநிலையில் நின்றுதான், மாவை தொடங்கி தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் அனைவரும் செயற்பட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் எதிர்பார்த்தது நிறைவேறாத போது, மற்றவர்களின் குற்றம் குறைகளை கூறிக்கொண்டு தங்களைச் சுற்றி உத்தம வேடம் தரித்து உலாவ முயல்கிறார்கள். கட்சியின் யாப்புக்கு ஒழுங்குக்கு அமைவாக அனைத்துச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இன்று நீதிமன்றங்களை நாடியிருக்கின்றவர்கள் மீது கட்சிக்கு துரோகம் இழைத்துவிட்டார்கள் என்று கூறும் தரப்பினரால் ஒருபோதுமே கட்சி நடவடிக்கைகள் யாப்புக்கு அமைவாக நடைபெற்றன என்று வாதிட முடியாது. தங்களுக்கு கிடைக்கவிருந்த பதவி பகட்டுக்களை நீதிமன்றம் வழக்குகள் தடுத்துவிட்டன என்பதுதான் அவர்களின் ஒரே கோபம். அந்தக் கோபத்தினை எப்படி வெளிப்படுத்துவது என்று தெரியாமல் பிரதான ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் வாய்ச்

தொடர்ச்சி▼

# தமிழரசுக் கட்சி செய்ய வேண்டியது என்ன?





தொடர்ச்சி▲

சவால்களையும் சேறுபூசுதல்களையும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழரசுக் கட்சித் தலைவருக்கான தெரிவின் போது, பிரதேசவாதம், சாதியவாதம், மதவாதம், தென் இலங்கைத் தலையீடுகள், புலம்பெயர் பண முதலைகளில் தலையீடுகள் என்று பல விடயங்கள் தாக்கம் செலுத்தியிருக்கின்றன. அதனை முழுவதுமாக திறந்து பேசுவதற்கு தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் யாரும் தயாராக இல்லை. அப்படிப் பேசுவதற்கு தயாராக இருந்தால், பல பசுந்தோல் போர்த்திய நரிகள் வெளிப்படுவார்கள். கட்சித் தலைவர் தேர்வில் போட்டியிட்டவர்களிலேயே மற்றவரை நோக்கி தமிழ்த் தேசியத் துரோகி என்று அடையாளப்படுத்தியவரில் இருந்து, மதவாதம் பேசி வாக்குச் சேகரித்தவர், பிரதேச வாதம் பேசி வன்மம் கக்கியவர்கள் வரையில் உண்டு. தமிழ்த் தேசிய அடையாளத்துக்குள் இருந்து கொண்டு பிரதேசவாதமும், சாதியவாதமும், மதவாதமும் பேசிக் கொண்டு, தமிழரசுக் கட்சியை வழிநடத்துவதற்காக தயாராக இருக்கிறோம் என்று அறிவித்தமை எல்லாம் என்ன வகையிலான அறத்தின் வழி வருவது என்று தெரியவில்லை.

தமிழ்த் தேசியம் ஒன்றும் அற்பத்தனங்களில் கட்டியெழுப்பப்படவில்லை. மாறாக, பெருந்தியாகங்களினாலும் அர்ப்பணிப்புக்களினாலும் எழுந்து நிற்பது. அதனை தமிழ்த் தேசிய செல்நெறிக்குள் இயங்கத் தயாராக இருப்பவர்கள் முதலில் புரிந்து நடக்க வேண்டும். தமிழரசுக் கட்சி தன்னை தமிழ் மக்களுக்கான கட்சியாக கருதாமல் வெளித்தரப்புக்களின் நிகழ்ச்சி நிரலுக்காக இயங்க ஆரம்பித்தால், அது தொடர் வீழ்ச்சியைச் சந்தித்து நிற்கும். அது, தமிழ் மக்களின் நம்பிக்கையையும் பெருமளவு குலைக்கும்.

தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள், கிளிநொச்சியில் நடத்திய சந்திப்பில் வழக்குகளை நிபந்தனையின்றி மீளப்பெறுமாறு வழக்கு தொடுநர்களிடம் கேட்பதற்காக குழு அமைத்திருக்கிறார்கள். திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு, கட்சியின் யாப்பினை மீறி தலைவர் தேர்வு நடைபெற்றிருக்கின்றது. அதில், நிறையவே முறைகேடுகள் இடம்பெற்றிருக்கின்றன என்று கூறியே தொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த வழக்கைத் தொடுத்தவருக்கு வழக்கை மீளப்பெறுமாறு, திருகோணமலையின் பிரதான ஆலய பிரதம குழு, சமயப் பெரியவர்கள், புலமையாளர்கள் குழு தொடர்ச்சியாக அழுத்தம் பிரயோகித்து வருகின்றது. அந்த அழுத்தங்கள் யாரில் தலையீட்டோடு நடைபெறுகின்றன என்பதை, கிளிநொச்சி தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர்கள் கூட்டம் வெளிப்படுத்தியது. யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தவரான பீற்றர் இளஞ்செழியன் கிளிநொச்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார். அவரிடம் யாரும் நேரடியாக வழக்கினை மீளப்பெறுமாறு கோரவில்லை. வழக்குகளை நிபந்தனையின்றி மீளப்பெறுமாறு கோருதல் என்பது என்ன அடிப்படையிலானது என்று மாவை சேனாதிராஜா, சிறீதரன் தொடங்கி தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் வெளிப்படுத்துவது நல்லது. ஏனெனில், அந்த வழக்குகள் கட்சியின் யாப்பினை பின்பற்றி கட்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துவன. சிலவேளை அந்த வழக்குகள் மீளப்பெறப்பட்டாலும், கட்சியின் எந்தவொரு உறுப்பினரும் நாளை வழக்குத் தொடுக்க மாட்டார்கள் என்பதற்கான எந்த உத்தரவாதமும் இல்லை. ஏனெனில், கட்சியின் யாப்புக்கு மீறிய தொடர் நடவடிக்கைகளை கட்சி இழைத்திருக்கின்றது. அப்படியான நிலையில், இன்றைக்கு நிபந்தனையின்றி வழக்கை மீளப்பெறுதல் பற்றியோ, நீதிமன்றத்தில் வழக்குகளை முறியடிப்போம் என்று முழங்குவதினால் எந்தப் பயனும் இல்லை. அது, கட்சியை முடக்கும் நிலைக்கு கொண்டு சேர்க்கும்.

இன்றைக்கு, தமிழரசுக் கட்சியின் தலைவர்களிடம் இருக்கும் ஒரே தெரிவு, கடந்த கால தவறுகளை களைவது தொடர்பிலான உறுதி மொழியை நீதிமன்றத்திலும் கட்சிக்காரர்களிடமும் வழங்குவதில் இருந்து ஆரம்பிக்க வேண்டியிருக்கின்றது. மூலக்கிளை தொடங்கி, தொகுதிக் கிளை, கட்சித் தலைவர் தெரிவு வரை கட்சியின் யாப்பின் பிரகாரம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை விரைவாக செய்ய வேண்டும். அதனை விரைவாக நடத்தியாக வேண்டும். இல்லையென்றால், பொதுத் தேர்தலும் ஜனாதிபதித் தேர்தலும் இந்த ஆண்டு நடைபெறவிருக்கின்ற நிலையில், கட்சியை நீதிமன்றங்களில் முடக்கிவிடும் செயற்பாடுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. எதிர்வரும் நாள்

தொடர்ச்சி▼

# தமிழரசுக் கட்சி செய்ய வேண்டியது என்ன?



தொடர்ச்சி▲

களில் இன்னும் சில வழக்குகள் கட்சித் தெரிவுகள், கடந்த தவறுகளுக்கு எதிராக தொடுக்கப்படும் என்று தெரிகின்றது. அப்படியான நிலையில், ஏற்கனவே நிகழ்ந்த தவறுகள் குறித்து நீதிமன்றங்களில் ஏற்று, நீதிமன்றங்கள் வழக்கும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி விரைவாக கட்சித் தெரிவுகளை மூலக் கிளை, தொகுதிக் கிளையில் ஆரம்பித்து நடத்தி முடிக்க வேண்டும். அதன் பிரகாரம், சிறீதரன் தன்னுடைய தலைவர் பொறுப்பை ஏற்பதே இப்போது இருக்கும் பிரச்சினைகளை குறைப்பதற்கான வழி. அதனை விடுத்து, நீதிமன்றங்களில் வழக்கை முறியடிப்போம் என்று அறிக்கை அரசியல் நடத்துவது தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் நல்லதல்ல. அதனால், ஆதாயம் அடையப்போகிறவர்கள் தென் இலங்கைக் கட்சிகளின் துணைக்குழுக்களும், உதிரிகளும் மட்டுமே.

நீதிமன்றங்களில் தவறுகளை ஏற்று விரைவாக கட்சியை மறுசீரமைத்து வழிப்படுத்த வேண்டும். மாறாக, மாவையின் செல்நெறியான "...பார்க்கலாம் தம்பி, செய்யலாம் தம்பி..." என்பதற்குள் சென்றால், கட்சி எதிர்கொண்டுள்ள தற்போதைய சிக்கலை ஒருபோதும் தீர்க்க முடியாது. தற்போது, கட்சி சந்தித்துள்ள நெருக்கடியை தங்களின் தனிப்பட்ட ஆதாயம், பகை – பழியுணர்ச்சிகளை தீர்ப்பதற்காவோ, அடைவதற்காகவோ யாரும் முயலக்கூடாது.

இந்த ஆண்டு நடைபெற இருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானம் மிக்க வாக்குகளாக இருக்கும். ஏனெனில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்கள் எழுச்சி பெற்றது மாதிரியாக தனித்த சிங்கள வாக்குகளினால் யாரும் வெற்றிபெறும் வாய்ப்புக்கள் இல்லை. அப்படியான நிலையில், தமிழ் மக்களின் வாக்குகளை அரங்கில் இருந்து அகற்றுவதற்கான செயற்திட்டங்களை ரணில் – ராஜபக்ஷக்கள் முன்னெடுத்திருக்கிறார்கள். அதில், பிரதானமானது ஜனாதிபதித் தேர்தல் புறப்பணிப்பு மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயங்களாகும். தமிழரசுக் கட்சி கடந்த காலங்களில் ஜனாதிபதித் தேர்தல் புறக்கணிப்பு மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயங்களுக்கு ஒத்துழைத்து செயற்பட்டிருக்கவில்லை. 2010 ஜனாதிபதித் தேர்தலிலேயே, ராஜபக்ஷக்களுக்கு எதிராக சரத் பொன்சேகாவை ஆதரித்திருந்தது. அப்படியான நிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் பிரதான வேட்பாளர்களில் ஒருவரை ஆதரிக்கும் நிலைப்பாட்டையே எடுக்கும் என்பது எதிர்பார்ப்பு. அப்படியான நிலையில், அது ஒருபோதும் ரணில் – ராஜபக்ஷக்கள் கூட்டுக்கு ஆதரவான நிலைப்பாடாக இருக்க வாய்ப்பில்லை. அதுபோல, வெற்றிவாய்ப்புள்ள சஜித் பிரேமதாஸவைக் கைவிட்டு அநுரகுமாரவின் பக்கத்திற்கு திரும்புவதற்கான வாய்ப்புக்களும் இல்லை. அப்படியான நிலையில், சஜித்துக்கான தமிழ் வாக்குகளைக் குறைப்பதற்கான திட்டத்தின் போக்கில், தமிழரசுக் கட்சிக்குள் தங்களின் செயற்திட்டங்களுக்கு இணங்கக்கூடியவர்களை ரணில் – ராஜபக்ஷக்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அதன்போக்கில், தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு தொடங்கி அனைத்து விடயங்களிலும் கவனம் செலுத்துகிறார்கள். அந்த நிகழ்ச்சி நிரலின் போக்கில் யாராவது நீதிமன்றத்துக்குள் கட்சியை முடக்க முனைந்தால், அது மீள முடியாத பிரச்சினைகளை தோற்றுவிக்கும்.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால், தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி தமிழ்த் தேசிய அரசியலுக்கு தமிழரசுக் கட்சி தன்னை மீளத் தயார்ப்படுத்த வேண்டும். அதுவும் ஒரு சில மாதங்களுக்குள் அதனைச் செய்து முடிக்க வேண்டும். இல்லையென்றால், வரலாற்றுத் தவறிழைத்த கறுப்புப் பக்கத்துடன் அந்தக் கட்சி தன்னுடைய முடிவுரையை விரைவில் எழுதிக் கொள்ள வேண்டி ஏற்படலாம். அதற்கான பொறுப்பை தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன், மாவை தொடங்கி சிறீதரன், சுமந்திரன் என்று அனைவரும் ஏற்க வேண்டி வரும்.



# கச்சதீவு திருவிழாவை புறக்கணித்த தமிழக தரப்பின் நியாயப்படுத்தலை ஏற்க முடியாது என்கிறார் தளபதி!



தமிழக மீனவர் கைது காரணமாக கச்சதீவு திருவிழாவை புறக்கணித்தோம் என்ற இந்திய மீனவர்களின் நியாயப்படுத்தலை ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டின் சட்டத்துக்கு அமைவாகவே நாங்கள் செயற்படுகிறோம். அடுத்த ஆண்டு திருவிழாவுக்கு முன்னர் சுமுகமான தீர்வு எட்டப்படும் என்று எதிர்பார்க்கிறேன் என கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார்.

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நேற்று சனிக்கிழமை நிறைவடைந்தது. திருவிழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் கடற்படை தளபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் தேசிய நல்லிணக்கத்துக்கு கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா சிறந்த எடுத்துக்காட்டாக காணப்படுகிறது. இனம், மதம், மொழி என்ற அடிப்படையில் எவ்வித வேறுபாடுகளுமில்லாமல் இலங்கையர் என்ற அடிப்படையில் நாட்டு மக்கள் அனைவரும் இந்தத் திருவிழாவில் கலந்துகொண்டமையையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் வரலாற்று சிறப்பு மிக்க வருடாந்தத் திருவிழாவைச் சிறப்பான முறையில் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகல தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய மற்றும் இலங்கையின் உறவின் பாலமாக இந்தத் திருவிழா அடையாளப்படுத்தப்படுகிறது.

இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதால் கச்சதீவு திருவிழாவை புறக்கணிப்பதாக இந்திய மீனவர்கள் குறிப்பிடும் நியாயப்படுத்தலை ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கையின் சட்டத்துக்கு அமையவே கைதுகள் இடம்பெறுகின்றன. சட்டத்தை மீறும்போது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது எமது பொறுப்பாகும்.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை பல ஆண்டுகாலமாக தொடர்கிறது. இதற்கு பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம். அடுத்த திருவிழாவுக்கு முன்னர் முரண்பாடற்ற தீர்வு ஒன்று காணப்பட வேண்டும். இந்திய மீனவர்கள் வழமை போல் திருவிழாவில் கலந்துகொள்ள வேண்டும். - என்றார்.

# 15 வயதுச் சிறுமியை மசாஜ் நிலையத்திற்கு கூட்டிச் சென்று துஷ்பிரயோகம்; யுவதி கைது

களுத்துறை பிரதேசத்திலிருந்து நீர்கொழும்பில் அமைந்துள்ள மசாஜ் நிலையமொன்றுக்கு 15 வயதான சிறுமியை அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய விவகாரம் தொடர்பில் 17 வயது யுவதி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான 17 வயது யுவதி, சிறுமியின் தாய் வீட்டில் இல்லாதபோது சிறுமியின் காதலனை சந்திக்க அழைத்துச் செல்கிறார் எனக் கூறி சிறுமியை தன்னுடன் அழைத்துச் சென்றுள்ளார்.

வீட்டில் இருந்து வெளியே சென்ற சிறுமி மீண்டும் வீடு திரும்பாததால் சிறுமியின் தாய் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

இந்நிலையில் சந்தேக நபரான யுவதி சிறுமியை ரயில் மூலம் நீர்கொழும்பு பிரதேசத்தில் அமைந்துள்ள வீடு ஒன்றுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் சிறுமி குறித்த யுவதியிடம் கேட்டபோது, இது மசாஜ் நிலையம் என அவர் தெரிவித்துள்ளார்.

பின்னர் இருவரும் மசாஜ் நிலையத்தில் இருந்து திரும்பிய நிலையில் காதலனை சந்தித்துள்ளனர்.

இதனையடுத்து இந்த சிறுமி ஊர் திரும்பி பொலிஸ் நிலையத்துக்கு சென்று மசாஜ் நிலையத்தில் தான் எதிர்கொண்ட நிலைமை தொடர்பில் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்த சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார் சிறுமியை வைத்தியசாலைக்குப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்த நிலையில் சம்பந்தப்பட்ட யுவதியைக் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மட்டக்களப்பு கடலில் அமைந்துள்ள மாந்தீவில் சிறைச்சாலை அல்லது புனர்வாழ்வு நிலையம்

## வாய்ப்புகள் உள்ளன என்கிறார் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்புநகருக்குஅருகில்கடலில்அமைந்துள்ள மாந்தீவில் புதிய சிறைச்சாலை அல்லது புனர்வாழ்வு நிலையத்தை நிறுவுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இவ்வாறு நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாந்தீவை பார்வையிடுவதற்காக நேற்று முன்தினம் சென்றிருந்த போதே அமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மாந்தீவு சுமார் 100 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாந்தீவில் தற்போது இரண்டு தொழுநோயாளர்கள் மாத்திரமே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.கொரோனா காலத்தில் இலங்கை விமானப் படையால் கையகப்படுத்தப்பட்டு கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட விமானப்படை அதிகாரிகளை தனிமைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்கியது.

எனவே, சுகாதார அமைச்சின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துத் தொழுநோயாளிகள் இருக்கும் இடத்துக்கு இரண்டு தொழுநோயாளிகளையும் மாற்றுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இந்த இடத்தில் சிறைச்சாலை அல்லது புனர்வாழ்வு நிலையத்தை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன.-என்றார்.

# நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பொது நிகழ்வு ஒன்றில் கோட்டா!



இலங்கை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நீண்ட நாள்களுக்குப் பின்னர் நேற்று பொது நிகழ்வு ஒன்றில் பங்குபற்றியுள்ளார்.

2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற மக்கள் போராட்டத்தால் பதவி விலகிய கோட்டாபய ராஜபக்ஷ அதன் பின்னர் விழாக்களிலும் பொது இடங்களிலும் பங்கேற்பதைத் தவிர்த்து வந்தார்.

இந்த நிலையில், கொழும்பு ஹுனுப்பிட்டிய கங்காராம விகாரையின் வருடாந்த நவம் பெரஹெரா நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இதனைத் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது, ரணில் விக்கிரமசிங்கவுடன் கோட்டாபய ராஜபக்ஷவும் பங்கேற்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.




# பொலன்னறுவை மாவட்டத்தில் நிலக்கீழ் நகரம் கண்டுபிடிப்பு!

இலங்கை பொலன்னறுவை மாவட்டத்தில் நிலக்கீழ் நகரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் பல புராதன நிர்மாணங்களின் எச்சங்கள் பூமிக்கு அடியில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்றின் அடித்தளத்தை வெளிப்படுத்தும் வகையில், இந்த கண்டுபிடிப்புகள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பூமிக்குள் சுமார் 5 மீற்றர் ஆழத்தில் உள்ள இந்த நகரத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஆஸ்திரேலியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட பூமியைப் பார்க்கக் கூடிய பிரத்தியேக ரேடார் இயந்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பொலன்னறுவையின் வரலாறு தொடர்பான மேலும் மறைக்கப்பட்ட தகவல்களைக் கண்டறிவதற்கு, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் குழுவொன்று பொலன்னறுவை தொல்பொருள் தளத்துக்குச் சொந்தமானவைகள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த ரேடார் இயந்திரம் பூமியை சுமார் ஐந்து மீற்றர் ஆழத்தில் ஆராயும் திறன் கொண்டது என்று குறிப்பிடப்படுகின்றது.

புராதன நகரமான பொலன்னறுவை அடிப்படையில் பல முக்கிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நிலக்கீழ் நகரம் பழைய பொலன்னறுவையின் மையமாகக் கருதப்படுகிறது என்றும் ரேடார் அப்பகுதியை ஆய்வு செய்தது எனவும் குறிப்பிடப்படுகிறது.

களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் திணைக்களத்தின் சிரேஷ்ட பேராசிரியர் பிரஷாந்த குணவர்தன இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் –

பொலன்னறுவையில் பூமிக்கடியில் புதைந்துள்ள பழங்கால கட்டடங்களின் இடிபாடுகளை நிலத்தடி ஊடுருவும் ரேடார் மூலம் பெறப்பட்ட சமிக்ஞை மூலம் வெளிப்படுத்த முடிந்துள்ளது. இதிலிருந்து அதன் அமைப்புகளை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் பழைய கட்டடங்கள், குளங்கள் மற்றும் எந்த அகழ்வாராய்ச்சி விடயங்களையும் வேறுபடுத்தி அறிய முடியும்.

தொடர்ந்து சரியான முறையில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டால் புதைந்த நகரம் மற்றும் அங்கு வாழ்ந்த மன்னர்கள் தொடர்பில் அறிந்துகொள்ள முடியும்.– என்றார்.

# சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்தவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார்!

பாணந்துறை – அலுபோமுல்ல பிரதேசத்திட 11 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்று கூறப்படும் ஒருவரைப் பொலிஸார் கைது செய்ய முற்பட்ட போது, சந்தேக நபர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

உயிரிழந்தவர் அதே பிரதேசத்தை சேர்ந்த 62 வயதுடையவர் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவந்துள்ளதாவது:–

சந்தேக நபரின் அயல் வீட்டில் பாதிக்கப்பட்ட 11 வயது சிறுமி வசித்து வந்துள்ளார். இந்த நிலையில் சிறுமி வீட்டில் தனியாக இருந்துள்ளார். சந்தேக நபர், சிறுமியைத் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

அங்கு சிறுமியிடம் கையடக்கத் தொலைபேசியில் ஆபாசக் காணொலிகளைக் காண்பித்து அவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமி, முதியவர் தொடர்பில் தனது தாயிடம் தெரிவித்த நிலையில் தாய் அலுபோமுல்ல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து சந்தேக நபரை பொலிஸார் கைது செய்ய சென்ற போது, அவர் வீட்டிலேயே உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

உயிரிழந்த சந்தேக நபர் , பாதிக்கப்பட்ட சிறுமியின் மூத்த சகோதரியையும் பல முறை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்பது பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சிறுமி பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அலுபோமுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.02.2024




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக் காது. என்றாலும் அமைதியாக சகஜமாக இருங்கள். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

இன்று பணிச் சுமைகள் காணப்படும். கொடுத்த பணி களை குறித்த நேரத்தில் முடிப்பது கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் இலக்குகளை அடைய திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனைத் தவிர்க்க இனிமையாகப் பேசி நட்பான அணுகுமுறை கொள்ள வேண்டும். இதனால் நல்ல புரிந்துணர்வும் நல்லுறவும் வளர்க்க முடியும்.

பணப் புழக்கம் சுமாராக இருக்கும். உங்கள் குழந்தை களுக்காகச் செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று உங்களிடம் அவநம்பிக்கை உணர்வு காணப்படும். இதனால் அமைதி இழந்து காணப்படுவீர்கள். இன்றைய நாள் உங்களுக்குச் சாதகமாக அமைய இந்த உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று பலன்கள் உங்களுக்கு சாதக மாக அமைய நீங்கள் கவனமுடன் பணியாற்ற வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்வதன் மூலம் வெற்றி காணலாம்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும். இதனால் இருவருக்குமிடையே யான உறவு ஆரோக்கியமாக இருக்கும்.

அதிகரிக்கும் செலவினங்கள் கவலையை அளிக்கும். பண நஷ்டத்தை தவிர்க்க கவனமாக செலவு செய்ய வேண்டும்.

கண் எரிச்சல், முதுகு மற்றும் கால் வலி பாதிப்புகள் ஏற்படலாம்.




இன்று மகிழ்ச்சியான பலன்கள் கிடைக்கும் அற்புதமான நாள். இன்று மறக்கமுடியாத தருணங்கள் உங்க ளுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். நீங்கள் கடுமையான பணிகளையும் எளிதாகச் செய்வீர்கள்.

உங்கள் பணிகளை சிறப்புற செய்வீர்கள். உங்கள் பணிகளைத் திறமையின் மூலம் முயற்சியின்றி முடிப் பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமணத்தில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை தரும்.

இன்று நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். எதிர்காலப் பொருளாதாரப் பாதுகாப்புக்காகப் போதிய அளவில் பணம் சேமிப்பீர்கள்.

உங்களின் மகிழ்ச்சியான மன நிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.




இன்று ஆன்மீகக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். பிரார்த்தனை உங்களுக்கு மிகுந்த திருப்தியை அளிக்கும்.

பணியிடத்தில் சவால்கள் காணப்படும். சிறப்புடன் பணியாற்றக் கவனமாக விழிப்புடன் இருக்க வேண்டும்.

இன்று நீங்கள் உங்கள் துணையுடன் வன்மையாகப் பழகுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தைப் பாதிக்கும் என்பதால் இதனைத் தவிர்த்தல் வேண்டும்.

பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் கட்டுக் கடங்காமல் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று தோல் எரிச்சல் போன்ற பாதிப்பு ஏற்படலாம். எனவே எண்ணெய் பதார்த்தங்களை தவிர்த்தல் வேண்டும். இன்று நீங்கள் பதற்றத்துக்கு ஆளாக நேரலாம்.




இன்று யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் ஏற்படும். இன்று சுமாரான பலன்களே காணப் படும்.

உங்கள் பணிகளில் வெற்றி பெற கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணிகளைத் திறமையுடன் முடிக்க சிறப்பாகத் திட்டமிட வேண்டும்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

நிதி வளர்ச்சி திருப்திகரமாக காணப்படாது. உங்கள் குடும்பத்துக்காகச் செலவு செய்ய நேரும். இது தேவை யற்ற செலவாக அமையும்.

சளி மற்றும் இருமல் தொல்லைகள் காணப் படும். குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது.




இன்றைய நாள் உற்சாகமாக காணப்படும். எந்த எதிர்பார்ப்புமின்றிச் செய்யும் காரியங்கள் இன்று வெற்றி யைத் தரும்.

பணியிடத்தில் இனிமையான சூழல் காணப்படாது. பணிச்சுமைகளும் அசௌகரியமும் கவலையை அளிக்கும்.

அனுசரித்து நடந்து கொண்டால் உறவில் புரிந் துணர்வையும் மகிழ்ச்சியையும் பராமரிக்கலாம். இதனால் திருப்தி நிலவும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். கவனமாக செலவழிக்காவிட்டால் பணம் இழக்க நேரிடும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பல் வலி மற்றும் செரிமானக் கோளாறு பிரச்சினைகள் ஏற்படலாம்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் இன்று அதிக முயற்சியின்றி உங்கள் பணிகளை ஆற்ற முடியும். இன்றைய சாதகமான பலன்களை அனுபவித்து மகிழுங்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக முன் னேற்றகரமான பலன் தருவதாகக் காணப்படும். உங்கள் செயல்திறனில் உங்களுக்குத் திருப்தி காணப்படும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்களின் சந்தோஷமான மனநிலை காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். நீங்கள் விரைவா கச் செயலாற்றி உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்களின் பரந்த நோக் கம் மற்றும் திறந்தமனம் வெற்றியை பெற்றுத் தரும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். குறித்த நேரத்துக்கு முன்பே உங்கள் பணிகளை முடிப் பீர்கள். இதனால் உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள துணையிடம் நேர்மையாகவும் விசுவாச மாகவும் இருப்பீர்கள். இதனால் உங்கள் துணை உங்களை நன்கு புரிந்துகொள்ளும் வாய்ப்பு உள்ளது.

இன்று பணப்புழக்கம் வெகுவாகக் காணப்படும். கணிசமான தொகை சேமிக்கும் சூழ்நிலை காணப் படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.02.2024




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. உங்கள் செயல்களில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். உணர்ச்சி வசப்படாமல் திட்டமிட்டு செயலாற்றினால் நல்ல பலன் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களால் பணியில் சில இடையூறுகள் ஏற்படலாம். பொறுமையுடன் செயலாற்றுவது சிறந்தது.

முறையான தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். அதிகரிக்கும் செலவினங்கள் காரணமாக உங்கள் தேவைகளுக்கு கடன் வாங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. வயிற்று வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. இன்றைய சவால்களை சந்திப்பது கடினமாக இருக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். இன்று அமைதியாக இருங்கள்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பணிகளை கவனமாக ஆற்ற வேண்டும். விரும்பத்தகாத சூழ்நிலைகளைத் தவிர்க்க சக பணியாளர்களுடன் உரையாடும் போது வார்த்தைகளில் கவனம் தேவை.

உங்கள் துணையுடன் நட்பான உறவு முறை கொள்ள வேண்டும். இது உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க உதவும்.

தேவையற்ற செலவுகள் செய்ய நேரலாம். எனவே சேமிப்பது இன்று கடினம். இதனால் கவலைகள் உண்டாகும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நேரலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்கும். புதிய வாய்ப்புகள் மூலம் பலனடைவீர்கள். வளர்ச்சி காண்பீர்கள். இதனால் திருப்தி உண்டாகும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் பணிகளை அர்ப்பணிப்புடன் செய்வீர்கள். இது உங்கள் வெற்றிக்கு உதவும். மேலும் நீங்கள் கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து பேசுவீர்கள். இனிமையான தருணங்களை இருவரும் பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதி வளர்ச்சி சுமுகமாகக் காணப்படும். உங்களிடம் இருக்கும் பணத்தைக் குடும்ப நலத்துக்காகச் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று வளர்ச்சியைக் காண்பீர்கள். உங்கள் திறமைகளை வெளிக்காட்டும் வாய்ப்பு கிடைக்கும். உங்களின் நம்பிக்கை உணர்வின் காரணமாக உங்கள் இலக்குகளை அடைவீர்கள்.

பணி நிமித்தமான பயணத்துக்கான வாய்ப்பு உள்ளது. இன்று உங்களுக்கு நன்மைகள் நடக்கும். உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி இலக்குகளை அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை ஏற்படுத்தும்.

உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய சிறிய அளவிலான கடன் வாங்குவீர்கள். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்குப் பணம் இருக்கும்.




Discover the Ultimate Investment &
Dynamic Destinations
which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.


Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park






# உலகின் தலை சிறந்த சோலார் பிராண்டுகள் குறைந்த விலையில் அபான்ஸிடமிருந்து

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் மின்பட்டியல் விலை அதிகரிப்பு தொல்லைகளில் இருந்து விடுபடுவதற்கும், அதன் தீர்வாகவும் சுற்றுச்சூழல் நட்புறமிக்க சோலார் அமைப்புகளை மிகவும் குறைந்த விலைகளில் அபான்ஸ் வழங்கி வருகிறது.

**Huawei, LG, Solis** மற்றும் துமைமெழ போன்ற விசேட விற்பனை நாமங்களுக்கு சொந்தமான உலகின் முன்னணி தரத்தில் உயர்ந்த சோலார் அமைப்புகளை அபான்ஸ் இடமிருந்து உங்களுக்கு பெற்றுக்கொள்ள முடியும். உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றின் தேவைகளுக்கு பயன்படுத்தும் சோலர் அமைப்புகளை உங்கள் தேவைகளுக்கு எற்பயுடியளெ இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இதன் அடிப்படையில், அபான்ஸ் வழங்கும் **Single Phase 5kW** சோலார் அமைப்பு ஒன்றை 999,000 ரூபாவிலிருந்து விற்பனை சந்தையின் மிகவும் குறைந்த விலையில் உங்களுக்குப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த சிறப்பு சலுகைகள் 2024 பெப்ரவரி 29 ஆம் திகதிவரை செல்லுபடியாகும்.

அபான்ஸ் இடமிருந்து நம்பிக்கையோடு சோலார் அமைப்புகளை கொள்வனவு செய்யும் உங்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. இதன் அடிப்படையில் முதல் 3 வருடங்களில் 1 சேவை இலவசமாக வழங்கப்படும். அத்தோடு இதன் பேனல் செயற்பாடுகளுக்கு 25 வருடகால உத்தரவாதம் வழங்கப்படுகிறது.

சோலார் அமைப்புகளை பொருத்தும் காலப்பகுதியில் எதிர்கொள்ள நேரிடும் சகல அபாயங்களுக்கும் காப்புறுதி வழங்கப்படுவதோடு, முதல் வருடத்தின் இயற்கை பேரிடர்கள், தீ மற்றும் திருட்டு சம்பவங்களுக்கு காப்புறுதி பொருந்தும்.

அபான்ஸ் சோலார் அமைப்புகளை பொருத்தும் பணியில் சிறந்த பயிற்சியுடன், அனுபவம் நிறைந்த ஊழியர்கள்,பொறியாளர் ஒருவரின் மேற்பார்வையில் பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்தோடு, 50 வருடங்களுக்கும் மேலாக வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனுபவம் வாய்ந்த புகழ்பெற்ற நிறுவனமான அபான்ஸ் நிறுவனத்தின் மூலம் வழங்கபடுவதனால் சோலார் அமைப்புகளின் நீடித்த உத்தரவாதம் உறுதிசெய்யப்படுகிறது.

சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் எரிசக்தி நெருக்கடி ஆகியவை இன்றைய உலகம் எதிர்கொள்ளும் மிக முக்கியமான பிரச்சினைகளாகக் கருதப்படுகின்றன, மேலும் இந்த உலகளாவிய சவாலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு இயற்கை வளமான சூரிய ஒளி உகந்ததாக பயன்படுத்தப்படுகிறது. இலங்கை போன்ற வருடத்தில் 365 நாள்களும் சூரிய ஒளி மிகவும் சிறந்த முறையில் கிடைக்கும் நாட்டில் இதுவே மிகவும் பொருத்தமான ஒரு தீர்வாகும்.

50 வருடங்களுக்கும் மேலாக வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அபான்ஸ் நிறுவனம் இவ்வாறான முதலீட்டை மேற்கொள்ளும் போது நம்பிக்கை வைக்கக் கூடிய ஒரு நிறுவனமாகும். மேலதிக விபரங்களுக்கு 011 2 108 108 துரித இலக்கத்திற்கு அழையுங்கள். அல்லது **www.abanssolar.lk** இணைய முகவரிக்கு பிரவேசியுங்கள்.







# சுகாதாரத் துறையினை மேம்படுத்தும் மக்கள் வங்கியின் 'மகாஜன மெஹெவர'

வர்த்தக சமூகப் பொறுப்புணர்வைப் போற்றத்தக்க வகையில் வெளிக்காண்பித்து, சமூகத்தில் சுகாதாரப் பராமரிப்புத் துறையில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு மக்கள் வங்கி மீண்டும் ஒரு முறை முன்வந்துள்ளது.

தனது 'மகாஜன மெஹெவர' நிகழ்ச்சித்திட்டத்தினூடாக பொரளை காசல் வீதி மகளிர் வைத்தியசாலையில் அத்தியாவசியமான புனரமைப்புப் பணிகளுக்கு வங்கி அனுசரணையளித்துள்ளதுடன், நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் சௌகரியத்திற்கு அவசியமான சுகாதார வசதிகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியுள்ளது.

சுகாதாரப் பராமரிப்பு ஸ்தாபனங்கள் சமூகத்திற்கு மிகச் சிறந்த சேவைகளை வழங்குவதை உறுதி செய்வதற்கு அவற்றுக்கு உதவுவதில் மக்கள் வங்கியின் அர்ப்பணிப்பை இச்செயற்திட்டம் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

இலங்கை முழுவதிலுமுள்ள பெண்களுக்கு விரிவான பராமரிப்பை வழங்குவதில் பெயர்பெற்றுள்ள காசல் வீதி மகளிர் வைத்தியசாலை, இந்த உன்னதமான முயற்சியின் பயனைப் பெற்றுள்ளதுடன், அதன் வசதிகளுக்கு மிகவும் தேவைப்பட்ட புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள அதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வின் அடையாளமாக மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஜித் தந்தநாராயணவிடம் இதற்கான காசோலையை கையளித்து வைத்துள்ளார்.

இந்த நல்லெண்ணம் சமூக நலன்புரியில் வங்கியின் அர்ப்பணிப்பை வெளிக்காண்பிப்பது மட்டுமல்லாது, வர்த்தக உலகில் முன்மாதிரியாக செயற்படுவதில் அதன் வகிபாகத்தையும் புலப்படுத்துகின்றது.

வங்கியின் வளங்கள் மற்றும் வலையமைப்பின் அனுகூலத்துடன், பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்குடன், 'மகாஜன மெஹெவர' என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மக்கள் வங்கியின் தொடர் முயற்சிகளின் ஒரு அங்கமாக இந்த முயற்சி அமைந்துள்ளது.









# 2023ஆம் ஆண்டுக்காக யூனியன் அஷ்யூரன்ஸ் 13.5 வீத பங்கு லாபத்தை பிரகடனம் செய்துள்ளது

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், வாடிக்கையாளர் சிறப்பு மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய செயற்பாடுகள் போன்றவற்றுக்கான அர்ப்பணிப்பின் பிரகாரம், 2023 நிதியாண்டுக்காக 13.5 வீத தொகையைகாப்புறுதிதாரர்பங்குலாபமாகபிரகடனம்செய்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்காக ஆரம்பத்தில் உத்தரவாதமளிக்கப்பட்டிருந்த பங்கு லாபப் பெறுமதியான 10 வீதம் என்பதை விட, நிறுவனம் நிதிசார் உறுதித் தன்மை மற்றும் மீட்சி ஆகியவற்றை வெளிப்படுத்தி இயங்கி, 13.5 வீதம் எனும் உயர் தொகையை பங்கு லாபமாக அறிவித்துள்ளது. நிறுவனத்தின் உறுதியான செயற்பாடுகளை வெளிப்படுத்துவது மாத்திரமன்றி, வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு தமது பெறுமதியை அதிகரித்துக் கொள்வதற்கான நிலையை மீள உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி செனத் ஜயதிலக கருத்துத் தெரிவிக்கையில்,

“மிகச் சிறந்த பங்கிலாப வீதத்தை அறிவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைவதுடன், 2023 ஆம் ஆண்டுக்கான உத்தரவாதமளிக்கப்பட்ட தொகையை கடந்துள்ளோம். எமது பங்காளர்களுக்கு உயர் பெறுமதியை ஏற்படுத்திக் கொடுப்பதில் எமது அர்ப்பணிப்புக்கான தெளிவான எடுத்துக்காட்டாக இது அமைந்துள்ளது.

குறிப்பாக, கடந்த தசாப்த காலப்பகுதியில் பிரகடனம் செய்யப்பட்ட அதியுயர் பங்கு லாப வீதமாக இது அமைந்துள்ளது. அதனூடாக, வெளியக சவால்களுக்கு முகங்கொடுத்த போதிலும், கடந்த காலங்களில் எமது தொடர்ச்சியான வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த குறிப்பிடத்தக்களவு பங்கு லாபம் செலுத்தல் என்பது, எமது வாடிக்கையாளர்களின் ஆயுள் நிதியத்தின் வளர்ச்சியில் பங்களிப்பு வழங்குவதுடன், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 64,510 மில்லியன் ரூபாவாக உயர்ந்திருந்தது. அதனூடாக நிதிசார் பாதுகாப்பு மேம்படுத்தப்படுவதுடன், எம் மீது கொண்டுள்ள நம்பிக்கைக்காக எமது வாடிக்கையாளர்களுக்கும் பங்காளர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றோம்.” – என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிதி அதிகாரி ஆஷா பெரேரா கருத்துத் தெரிவிக்கையில்,

“2023 ஆம் ஆண்டுக்காக யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தினால், 13.5 வீத பங்கு லாப பிரகடனம் என்பது, உறுதியான நிதிசார் முகாமைத்துவம் மற்றும் முறையான முதலீட்டு மூலோபாயங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. எமது வெற்றிகரமான செயற்பாட்டில், நீண்ட கால பெறுமதி உருவாக்கத்தை பேணுவதுடன், மாறும் சந்தைப் போக்குகளை பின்பற்றுவதற்கான ஆற்றல் போன்ற ஒழுக்கமான செயற்பாடுகள் ஏதுவாக அமைந்திருந்தன. சிறந்த வருமதிகளைப் பெற்றுக் கொடுப்பதில் நாம் எம்மை அர்ப்பணித்துள்ளதுடன், அதனூடாக யூனியன் அஷ்யூரன்ஸில் தொடர்ச்சியான நம்பிக்கையை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றோம்.” – என்றார்.